# **கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆத்தூர்.**

முன்னிலை : **திருமதி. D. ஜான்சிராணி MBA., LLM.,**
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 23–ஆம் நாள், வெள்ளிக்கிழமை

**இ.ம.எண். 10/2025 இன் அ.வ.எண்.36/2003**

**CNR No. TNSA13-000046-2003**

செல்லம்மாள்
பொது அதிகாரம் பெற்ற முகவர்
V.அங்கமுத்து . . . மனுதாரர்/வாதி

/எதிராக/

1. வள்ளி
2. பொன்னுசாமி
3. ஆறுமுகம்
4. சின்னுகவுண்டர் . . . எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவின் மீதான விசாரணையானது, 23.01.2026–ஆம் தேதியில் இந்நீதிமன்றத்தின் முன்பு இறுதியாக வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.N.நடேஷ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சிவக்குமார் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.காமராஜ் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜரின்மையால் தோன்றாதரப்பினராக்கப்பட்டும், இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளைக் கேட்டும், இரு தரப்பு ஆவணங்களை பரிசீலித்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரர்/வாதி இம்மனுவை சேலம் மாவட்டம், இராமநாயக்கன்பாளையம் (தெற்கு) கிராம நிர்வாக அலுவலர் அவர்களை மனுவில் கண்ட விபரங்கள் படி வாதி தரப்பு சாட்சியாக விசாரணை செய்ய உரிய அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 16 பிரிவு 1(2) மற்றும் பிரிவு 151 ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

2. **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :**

மனுதாரர் இம்மனுவில் மனுதாரரும் மேற்படி வழக்கில் வாதியின் பொது அதிகாரம் பெற்ற முகவர் என்றும், சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், இராமநாயக்கன்பாளையம் தெற்கு கிராமம் சர்வே எண்கள்.75/3, 74/1, 73/7, 73/6, 73/10 மற்றும் 70/7 சம்மந்தப்பட்ட சிட்டா, அடங்கல், புலவரைபடம், அ–பதிவேடு ஆகிய வருவாய்துறை ஆவணங்களின் அசல் மற்றும் உண்மை நகல்கள், மேற்கண்ட சர்வே எண்கள் சம்மந்தப்பட்ட நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் அல்லது அவர்களது வாரிசுகளுக்கு அடமானம் வழங்கி உத்திரவு பிறப்பிக்கப்பட்ட ஆவண கோப்புகள் சம்மந்தப்பட்ட சான்றாவணங்களை வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட வேண்டியுள்ளது என்றும், மேற்படி சான்றாவணங்கள் தாவா சொத்திற்கு தேவையான மிக முக்கியமான ஆவணங்கள் என்றும், அவற்றை வாதி தரப்பில் குறியீடு செய்ய வேண்டியது அவசியம் என்றும், எனவே இராமநாயக்கன்பாளையம் தெற்கு கிராம நிர்வாக அலுவலர் அவர்களை வாதி தரப்பில் விசாரித்து ஆவணங்களை குறியீடு செய்ய அனுமதி வேண்டி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

3. **1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:**

இம்மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் 1ம் எதிர்மனுதாரர் வெளிப்படையாக ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்றவற்றை மறுக்கிறார். மேலும் வாதி தரப்பில் ஏற்கனவே மாவட்ட ஆட்சியருக்கு மேற்படி மனுவில் கோரியுள்ள ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யக்கோரியும், அதன் அடிப்படையில் மாவாட்ட ஆட்சியர் நேரடியாக ஆஜராகி சாட்சியம் அளிக்க வேண்டி மனு தாக்கல் செய்து, அதனடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் நேரடி உத்திரவு பெற்ற நபர் கனம்

நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்படி சர்வே எண்கள் சம்மந்தப்பட்ட சிட்டா, அடங்கல், புலவரைபடம், அ பதிவேடு ஆகிய வருவாய்துறை ஆவணங்களின் நகல்களும், நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் அல்லது அவர்களது வாரிசுகளுக்கு அடமானம் வழங்க உத்திரவு பிறப்பிக்கப்பட்ட ஆவண கோப்புகள் சம்மந்தப்பட்ட சான்றாவணங்கள் எதுவும் மேற்படி நிர்வாகத்தால் பாரமரிக்கப்படும் பதிவு அறையில் எவ்வித ஆவணங்களும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளதாகவும், அதனடிப்படையில் அன்றைய தினமே 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் மனுதாரர்/வாதி மீண்டும் மீண்டும் வருவாய்துறையில் இல்லாத ஆவணங்களை பொருத்து அரசு அதிகாரிகளை விசாரிக்க வேண்டுமென்று ஒவ்வொரு வாய்தாக்களிலும் குறிப்பாக அதிகாரிகளை விசாரிக்க வேண்டுமென்று அனுமதி வேண்டி கனம் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்வதாகவும், எனவே இம்மனுவானது தள்ளுபடி செய்யத்தக்கது என்றும், மேற்படி வழக்கில் மனுதாரர்/வாதி தரப்பில் ருசுப்படுத்த எந்தவித வருவாய் ஆவணங்களும் இல்லை என்றும், வாதி கோரும் ஆவணங்கள் சம்மந்தப்பட்ட அலுவலகத்தில் இல்லை என்று தெளிவாக அரசு தரப்பு சாட்சியத்தின் மூலம் தெளிவாக கனம் நீதிமன்றத்தல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

2ம் எதிர்மனுதாரர் தனது தரப்பில் இம்மனுவை அனுமதிப்பதில் ஆட்சேபனை இல்லை என குறிப்புரை செய்துள்ளார்.

4. **தற்பொழுது இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர் இம்மனுவில் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.**

5. இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. மனுதாரர்/வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், இராமநாயக்கன்பாளையம் தெற்கு கிராமம் சர்வே எண்கள்.75/3, 74/1, 73/7, 73/6, 73/10 மற்றும் 70/7 சம்மந்தப்பட்ட சிட்டா, அடங்கல், புலவரைபடம், அ–பதிவேடு ஆகிய வருவாய்துறை ஆவணங்களின் அசல் மற்றும் உண்மை நகல்கள், மேற்கண்ட

சர்வே எண்கள் சம்மந்தப்பட்ட நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் அல்லது அவர்களது வாரிசுகளுக்கு அடமானம் வழங்கி உத்திரவு பிறப்பிக்கப்பட்ட ஆவண கோப்புகள் சம்மந்தப்பட்ட சான்றாவணங்கள் இவ்வழக்கிற்கு இன்றியமையாத ஆவணங்கள் என்பதால் இராமநாயக்கன்பாளையம் தெற்கு கிராம நிர்வாக அலுவலர் அவர்களை வாதி தரப்பில் விசாரித்து ஆவணங்களை குறியீடு செய்ய இம்மனுவை அனுமதிப்பது அவசியம் என்று வாதிட்டார்.

மாறாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிடுகையில், ஏற்கனவே மாவட்ட ஆட்சியரின் நேரடி உத்திரவு பெற்ற நபர் கனம் நீதிமன்றத்தில் ஆஜராகி மேற்படி சர்வே எண்கள் சம்மந்தப்பட்ட சிட்டா, அடங்கல், புலவரைபடம், அ பதிவேடு ஆகிய வருவாய்துறை ஆவணங்களின் நகல்களும், நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்க உறுப்பினர்கள் அல்லது அவர்களது வாரிசுகளுக்கு அடமானம் வழங்க உத்திரவு பிறப்பிக்கப்பட்ட ஆவண கோப்புகள் சம்மந்தப்பட்ட சான்றாவணங்கள் எதுவும் மேற்படி நிர்வாகத்தால் பாரமரிக்கப்படும் பதிவு அறையில் எவ்வித ஆவணங்களும் இல்லை என்று சாட்சியம் அளித்துள்ளதாகவும், எனவே இராமநாயக்கன்பாளையம் தெற்கு கிராம நிர்வாக அலுவலரை விசாரிப்பது இவ்வழக்கிற்கு அவசியமற்றது என்றும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்த்ததில் மனுதாரர்/ வாதியும் 1, 2 பிரதிவாதிகள்/எதிர்மனுதாரர்கள் சகோதர சகோதரிகள் என்பது தெரிய வருகிறது. கடந்த 1998ல் வாதி, 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் அங்கமுத்து அவரது சொத்துக்கள் குறித்து ஆவணங்கள் எதுவும் ஏற்படுத்தாமல் இறந்ததால் அவரது வாரிசுகளான வாதி, 1, 2 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை கூட்டாக அனுபவித்து வருகின்றனர். இந்நிலையில் தாவா சொத்து வாதி, 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனார் திரு.அங்கமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதை நிரூபிக்க வாதிக்கு போதிய வாய்ப்பு அளிக்க வேண்டியும், மேற்படி ஆவணங்களை வாதி தரப்பில் தாக்கல் செய்ய இம்மனுவை அனுமதிப்பது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது எனவும் இந்நீதிமன்றம் கருதுகிறது.

7. தீர்வு:

இறுதியாக இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் வரிவடிவில் எடுக்கப்பட்டு, கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள், 23–ம் நாள், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.01.23 18:28:27 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

1. மனுதாரர்/வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

2. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:

இல்லை

D JANSIRANI
Digitally signed by D JANSIRANI
Date: 2026.01.23 18:28:35 +0530

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**ஆத்தூர்.**

**<u>சூ.மா.உ.நீ. ஆத்தூர்</u>**
அசல்/வரைவு/உத்தரவு
இ.ம.எண். 10/2025 இன்
அ.வ.எண்.36/2003
நாள் : 23.01.2026